திரு பி. முசிறிப்புத்தன் : பேரவைத் தலைவரவர்களே, நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த திருச்சி அரசு மருத்துவ மனையிலே செவிலியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் குறித்து நேற்று பிற்பகலிலே அனைவரையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவே போதுமானது என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது போல், இதுபோன்ற பிரச்சினை களில் காலதாமதம் ஏற்படாமல், உடனுக்குடன் கவனிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல. பொதுவாகவே, மருத்துவ மனை களில் இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் நடப்பதற்கு அறிகுறி தென்படுவதற்கு முன்பாக, இவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் தாமரைக்கனி அவர்கள் செவிலியர் களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். நான் அச்சப்படுவதெல்லாம் மருந்தாளுநர்களும் செவிலியர்களும் நடத்துகின்ற வேலை நிறுத்தத்தில் வியாதியஸ்தர்களுக்கு பாது காப்புத் தர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பிரச்சினை தீர இந்த நல்ல முயற்சியை மேற்கொண்ட நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் இதே பொருள் குறித்து ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பேரவை விதி 54 (6)-ன் கீழ் அவர் பெயர் சேர்க்கப்படவில்லை.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

(இ) உரிமைப் பிரச்சினை அறிவிப்பு.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : Sir I want to make submission under Rule 246 of the Assembly Rules.

நான் மாண்புமிகு திரு. ராஜா முகமது அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். வருகிற வழியில் கொஞ்சம் இடைஞ்சல் ஏற்பட்டு விட்ட காரணத்தால் காலதாமதமாகக் கொடுத்தேன் தாங்கள் இன்றையதினம் அனுமதிக்கவில்லை என்றாலும் நாளையதினம் அல்லது நாளை மறுதினம் அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை அவை கூடிய பிறகு அலுவலகத்தில் கொடுத்துவிட்டு அந்தப் பிரச்சினையை

1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதிலே உரிமை மீறல் உள்ளதா இல்லையா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் அதை அனுமதிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

(ஈ) நடவடிக்கை சுருக்க வெளியீடு.

திரு. ரா. உமாநாத் : நேற்று சம்மரி ஆப் ப்ரொசீடிங்சைப் பார்த்ததில் நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாறான பொருள் படக்கூடிய ஒரு வாசகம் அதிலே இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷனை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கொடுத்தது தெரியும். பத்திரிகையிலிருந்து எக்ஸ்பிளனேஷன் கிடைத்த பிறகு அது எடுத்துக் கொள்ளப்படும் என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால் சம்மரி ஆப் ப்ரொசீடிங்சில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்குப் பதிலாக தீர்ப்பு கூறப்படும் என்று இருக்கிறது அதைத் திருத்த வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுவதே இன்ப்ரக்சுவஸ் ஆகும். பதில் எப்போது பத்திரிகையிடமிருந்து வரும் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளப்படும் என்றால் விவாதிக்கப்படும் என்றுதான் பொருள். அது பற்றிப் பேராசிரியர் பெரிய விளக்கமெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

(உ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது பற்றிய நடைமுறை.

டாக்டர் மு. கருணாநிதி: திரு உமாநாத் எழுப்பிய பிரச்சினை தொடர்பாக நானும் தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை அளிக்கப்படுகிற நேரத்தில் தாங்கள் அனுமதிப்பீர்களானால் என்ன உரிமைப் பிரச்சினை என்பதைப் படிக்கச் சொல்லி, பேசச் சொல்லி அதற்குப் பிறகுதான் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் தாங்கள் விளக்கம் கேட்டு தீர்ப்பு வழங்க வேண்டும். அதுதான் இந்த அவையின் மரபாக ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. தீர்ப்பு பிறகு வழங்கப்படும் என்று சபாநாயகர் சொல்லிவிட்டு இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் கழித்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து, கடிதம் எழுதி அவர்களிடம் சமாதானம் பெற்ற பிறகு, இதோடு விட்டு விடலாம் அல்லது உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம் என்று சபாநாயகர் தீர்ப்புக் கூற வேண்டும். சபாநாயகர் அவர்கள் அதற்கு முற்றிலும் மாறாக உரிமைப் பிரச்சினை எழுப்பியவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி